REG. No M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

LeRédacteur
S. CANDIAH PILLAI

# விந்தகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை.

VOL. III. புதுவை, தாது ஸூ ஆனி மீ ககூ௨ (2—7—36) No.29

## சுந்தரர் தேவாரம்.

போர்த்த நீள்செவி யாளரந்தணர்க்குப் பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத் தருளினுய்ப் பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்துவந் திழியும் புனற்கங்கை நங்கை யாளை நின் சடைமிசைக் கரந்த
தீர்த்தனே நின்றன் திருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்
[கூருளானே.

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரி லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை யொருவ நீ கரிகாட ரங்காக
மானை நோக்கியோர் மாநட மகிழ மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன் கூருளானே.

## காசி ஹநுமான்காட்

## TS சீதாராம ஐயர் அவர்கள் எழுதுவது

(தொகுதி3, 28-ம் வாரத் தொடர்ச்சி)

காஞ்சி காமகோடி மடத்தையே ஆத்ய சங்கராசார்யாள் முகாந்தரம் ஸ்தாபிக்கப்பட்ட முதல் பீடமென்றும் அதினுடைய அதிபதிகளான ஸ்ரீஸ்வாமிகளையே ஜகத்குரு என்றும் ஸித்கம் செய்ய அவருடைய வரவேற்பின் பிரயத்தினமாயிருந்தால் இந்தப் பிரயத்தினமானது விசாரமுள்ள புருஷர்களின் புத்திக்கு எப்பொழுதும் பொறுக்கத் தகாதது. இந்தப் பிரயத்தினத்தினுல் காஞ்சி காம கோடி மடமானது முதல் பீடமாக ஆய்விடுமா என்ன?

ஸப்த புரிகளில் ஒன்ருகி பிரஸித்தி பெற்று விளங்கி வரும் காஞ்சீ நகரில் ஸ்ரீ ஏகாம்பரநாதர், ஸ்ரீ வரதராஜப் பெருமாள், ஸ்ரீ கமாக்ஷியம்மன், தேவாலயங்கள் உலக பிரஸித்தியாய் இருப்பதுடன் இன்னும் அளவற்ற தேவாலயங்களும் மிக உன்னதமான கோபுர மண்டபப் பிராகாராதிகளுடன் விளங்கி வருவது போல ஸ்ரீ ஆத்ய சங்கராசார்யாள் முகாந்திரம் ஸ்தாபிக்கப்பட்ட மடமானது ஸ்ரீ பரமாசார்யாள் காலத்திலிருந்து .அங்கிருந்தால் இவ்வித ஸந்தேகம் ஏற்படக்காரணமிராது.

பொதுவாக ஒரு விஷயத்தைப் பற்றி நேயர்கள் ஆலோசிக்கலாம். ஸ்ரீ காசி மஹாராஜா வரவேர்புத் தலைவராக யிருந்தால் ஏதாவது முக்கியமான தத்வமின்றி தலைமை ஸ்தானத்தை ஏற்றுக்கொள்வாரா வென்று பொது ஜனங்கள் நினைக்கக்கூடும். ஆனுல் மஹாராஜாவின் அந்தரங்க அபிப்பிராயர் எவ்விதமென்று ஒருவராலும் நிச்சயிக்க முடியாது.

பொது ஜனங்களால் செய்யப்படும் எவ்விதப் பிரயத்தினங் களுக்கும் மஹாராஜாவை தலைமை ஸ்தானம் வகிக்குப்படி 10 பிரமுகர்கள் ஒன்று கூடிப் பிரார்த்தித்தால் கட்டாயம் ஷெ பிரார்த்தனைக் கிணங்கி தலைமையாக இருக்கவே செய்கிருர். அல்லது பத்திரிகையிலாவது தலைமை ஸ்தானத்தி விருப்பதாகக்காணப்படுகிறது. பிறகு மஹாராஜாவின் ஸ்தானத்திற்கு பதிலாய் வேரு யாராவது தலைமை வகிப்பதும் உண்டு. ஸாதாரணமாக அன்னிய மதஸ்தர்களின் பிரதான குருக்கள் தன் ராஜ்யத்திற்குள் நூதனமாக வருவதாயும் அவ்விதம் வரும் குருக்களைத் தாங்களே முதன்மையாய் நின்று வரவேற்கவேண்டுமென்று அன்னிய மதஸ்தர்கள் மஹாராஜாவை வேண்டினுல் அதற்கும் இணங்கி மஹாராஜா முதன்மையாகவிருக்கிருர். ஆகையால் மஹாராஜா யாவருக்கும் பொது வாகியவர்.

ஸ்ரீ ஜகத் குருவாக மதித்து வரவேற்பதில் அனேகப் பிரமுகர்களுக் கிஷ்டமில்லாமலிருந்தது. சில பிரமுகர்கள் ஷெ காமகோடி மடத்தின் உற்பத்தி முதலியவைகளைப் பற்றி பத்திரிகைகளில் வியாஸங்களெழுதியும் அறிக்கை விளம்பரங்கள் வெளியிட்டும் ஸந்தேக வினுக்கள் கேட்டார்கள். பொதுவாக ஷெ மடாதிபதிகளின் வருகையைப்பற்றி இவ் விடம் ஜனங்களுக்குள் பல வித குழப்பங்கள் உண்டாகிக் கொண்டிருந்தன.

உலகத்தில் பிரதி ஒரு தேசங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் அனேக மதங்களைத் தழுவினவர்களாயிருக்கிருர்கள். புண்ய பூமி யென்று பிரஸித்தி பெற்ற இந்தியா தேசத்திற்கு முக்கியமானவர்கள் ஹிந்து மதத்தை பிரதானமாகக் கொண்டவர்கள் என்பதை யாவரு முணர்ந்த விஷயமே. பிரதி யொரு மதத்திற்கும் கடவுளால் நியமிக்கப்பட்ட சட்டம் அனுதி காலமாய் இருந்து வருகிறது. ஷெ சட்டப்படி நடக்கப்பட்டவர்களையே தர்ம்மிஷ்டர்கள் என்று சொல்வது.

ஹிந்துக்களில் பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு வர்ணங்கள் வேத, இதிகாஸ, புராணுதிகளில் பிரஸித்தியாகக் காணப்படுகின்றன. முதல் வர்ணத்தார்களாகிய பிராம்மணர்களில் பஞ்சத்திராவிடர்களென்றும் பஞ்ச கௌடர்களென்றும் இரு பிரிவு. திராவிட, ஆந்திர, கர்னுடக, மஹாராஷ்டிர. கூர்ஜ்ஜர, என்ற ஐந்தும் பஞ்சத் திராவிடர்களின் பிரிவு. கௌட, ஸாரஸ்வத, மைதில, சார்யகுப்ஜ, உத்கல, இவ் வைந்தும் பஞ்ச கௌடர்களின் பிரிவு. மொத்தம் தச விதப் பிராம்மணர்கள் அனுதி காலமாய் உலகப் பிரஸித்தியுடன் விளங்கி வருகிறது.

இப்பொழுது சிலகாலங்களாய் பத்திரிகைகளில், விசுவகர்ம்மபிராம்மணர் சிவாசாரிப் பிராம்மணர் ஸௌராஷ்டிரப் பிராம்மணர் என்று அனேக விதப் பிராம்மணர்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கும் வேதாத்தியயனம் முதலியவைகளும் நித்திய கர்மனுஷ்டானங்களும் கிரமப்படி செய்து வந்தாலும் இவர்களை மேலே கண்ட தச விதப் பிராம்மணர்கள் செய்து வரும் ஹவ்யகவ்யாதிகளில் ரித்துவிக்காக வரிப்பதில்லை. பிராசீனக் கிரந்தங்களில் விசுவ கர்மப் பிராம்மணுதிப் பிரிவுகள் காணப்படாததால் இவர்களைத் தங்கள் ஸங்கங்களில் சேர்த்துக்கொள்வதில்லை.

இங்ஙனமே ஸன்னிபாஸாசிரம யோக பட்ட நாமங்கள் (10) வகை என்று யதி தர்ம்ம நிர்ணயம் முதலான தர்ம்ம சாஸ்திர கிரந்தங்களில் காணப்படுகின்றன. மேலும் ஷெ ஆசிரமிகள் தங்கள் குரு முகமாகத் தங்கள் ஸொந்த வேதத்தில் உள்ள மஹாவாக்யத்தையே உபதேசம் பெற்று ஜபம் செய்து வருகிருர்கள். வேதமும் ரிக் வேதம், எஜுர் வேதம், ஸாமவேதம், அதர்வண வேதம், என்று நான்கே உலகப்பிரஸித்தம். நான்கு வேதத்திற்கு நான்கு வாக்கியந்தான் பிரதானமாய் "உபநிஷத்து" முதலான சுருதிகளில் சொல்லப்பட்டிருப்பதாக பெரியோர்கள் சொல்லுகிருர்கள். உலகப் பிரஸித்தியாகவுமிருக்கின்றன.

திராவிட தேசத்திற்கு நூதனமாக மஹாராஷ்டிர தேசத்திலிருந்து ஒரு பிராம்மணன் அதிதியாக போஜனத்திற்கு வந்தால் முன்பார்த்திராத ஷெ பிராம்மணனை பிராம்மணன் தானென்று எவ்விதம் தெரிந்துகொள்வது? குலம், கோத்திரம், சூத்திரம், பிரவரம் முதலியவைகளைக்கேட்டு அவர் சொல்லும் கோத்திராதிகள் ஸரியா யிருப்பதாகத் தோன்றினுல் தான் பிராம்மண ஸங்கத்தில் அதிதியாக வரிப்பார்கள். இல்லாவிடில் தங்கள் பந்தியில் போஜ

உள்நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 3

வெளி நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 4.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ—ÉGALITÉ—FRATERNITÉ

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
Tamil Pandit
Jaffna
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது.

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichéry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெ.பர் 2,
புதுவை.

VOL. III. | புதுவை, தாது ஹ ஆனி மீ ௧௧ உ (2—7—36) | NO. 29.

## சுத்த சாதகம்.

சரமந்தவிருளிலிருந்திடுங்காலைத்
தனுமுதனுன்குமவ்விருளாம்

சரமந்தமருளினடித்திடுங்காலைத்
தனுமுதனுன்குமம்மருளாம்

சரமந்தவோவினடித்திடுங்காலைத்
தனுமுதனுன்குமவ்வோவாம்

சரமந்தவருளினின்றிடுங்காலைத்
தனுமுதனுன்குமவ்வருளாம்.

இருள்வடிவதுவுமருள்வடிவதனி
லெய்தியேமறைந்திடுமிந்த

மருள்வடிவதுவுமோவடிவதினின்
மறைந்திடுமோவடிவதுவும்

அருள்வடிவதனின்மறைந்திடுமந்த
வருள்வடிவதுவுமச்சிவத்தில்

தேருள்வடிவானசத்தியாய்முன்போற்
றிகழுமென்றசியுநரத்திடுமே.

உ
திருவருள் துணை.

ம
நந்திபதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை
தாது ஞல ஆனி மீ கக உ

## கொடுமை.

தக்க இல்லாகிய அமலவடிவம் பெற்று உலக குரவராய் வதிந்து துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகராய்த் தமது சொல்லாலும் அரும் பெரும் செயலாலும் சத்திய நெறியை நிலை நாட்டிய தத்துவப் பெரியாராகிய இடைக்காடர் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய

மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் அறக்கூறு என்னும் மூன்றாவது அத்தியாயத்தில் நான்காம் சூக்த மகுடமாகி மிளிர்வது "கோடுமை" என்பது.

இதற்கு முந்திய சூக்த மகுடமாகிய "ஈயாமை" என்பதன் பண்பும் பயனும் "வித்தகம் தொகுதி 3 இல. 28இல் ஷை சூக்தம் முதலியவாறு ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப் பட்டன.

"கொடுமை" என்னும் சூக்தப் பொருள் ஈண்டு ஒரு சிறிது விளக்க முற உரைக்கப் படும்.

மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையுந் தான் வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் உபநிடதங்கள் என்பனவுந்தான் பக்குவ சீவன் குருவருளால் அமல முகற்படியாகிய — நிறை கோலாகிய வியாப்பிய வியாபக மத்திய கதம் என்னும் தடத்தை அடைதற் குரிய பொதுவான சாதகங்களையும் பிறவற்றையும் பற்பல உருவமான கற்பனைகளால் போதித்து வழங்குமே யன்றி,

அவ் உந்நதமான நிலைமைக்கு அப்பால் உள்ள நிகழ்ச்சிகளைக் கூறுவன வல்ல; கூற முடியாது; கூற இயலாது. ஆதலாற்றான் அத்தகைய உயரிய தடமானது வேத முடிவான இடம் — முடியான இடம்—வேத அந்தமாகிய நாத அந்தம் என அறுதி யிடப்படுவதாயிற்று. ஆசைப்பேறு அடிப் படையாகப் பெற்றமையால் வேட்கை ஒழிந்த இடம் வேட்கை என்னும் அவா ஒழிந்த இடம் இதுவே ஆம்.

### திருமந்திரம்

———

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்
[திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்
[டாரே.

(ஷை 1-ம் தந். அந்தணரொழுக்கம் மந்.6)

நாத முடியிலே நல்லா ளிருப்பது
நாத முடியிலே நல்யோக மிருப்பது
நாத முடியிலே நாட்ட மிருப்பது
நாத முடியிலே நஞ்சுண்ட கண்டனே.

(ஷை 3-ம் தந். தியானம் மந். 12)

[நாத முடியை அடையப் பெற்றவரே ஆலத்தை அமுத மாக்கியவர்—நஞ்சுண்ட கண்டர் — சிவமாந் தன்மை எய்தியவர்]

ஆதலால் அதற்கு அப்பால் சுருதி என்பது இல்லை. சுருதியாகிய முன்னிலை முன்னிலை என்னும் ஆசான் இல்லை; ஆசானாகிய வேதம் வேதமாகிய நாதம் இல்லை. ஆதலால் அதற்கு அப்பால் பேச்சில்லை: பேசுதற்கு இல்லை. ஏன்? கேட்பார் இருந்தாலன்றோ பேசுவோர் உண்டு. ஆசான் மாணவன் என்னும் தத்துவங்கள் சமம் பெற்றுழி பேசுபவர் யார்? கேட்பவர் யார்?

ஆதலாற்றான் சுருதி முடிந்த இடத்துக்கு அப்பால் பேச்சில்லை என்று கூறப் பட்டது. ஆனவனே ஆனதை அறிவன். பிறர் அறியார் — அறியவும் முடியாது என்பதே பொருளாம்.

இதனால் பெறப்படுவது யாது?

மூவடி முப்பது என்னும் நூலில் பக்குவி யானவன் கைக்கொண்டு ஒழுக வேண்டிய சாதனங்கள் இன்பக்கூறு, பொருட்கூறு, அறக்கூறு ஒழிபு என நான்கு வகையாகப் பிரித்துக் கூறப் படினும், யாவற்றுக்கும் அடிப் படையாகிய இன்பக் கூறு முதலிய களவொழுக்கப் பயில்வே இன்றி யமையாச் சாதனம் என்பதும்,

அவ் ஒழுக்கமே நிறை கோல் என்னும் மைய முள்ளாகிய மத்திய கதஸ்தானத்தை வழங்கும் என்பதும்,

அத் தடந்தான் வேதாகமாதிகளால் வெகு விதமாக—பலப்பல கற்பனைகளால் முழங்கப் படும் நிலை என்பதுமே என அறிதற் பாற்றும்.

ஆனால் ஷெ நூல்களிலும் தான் பிற நூல்களிலும் தான் புருஷார்த்தங்கள் நான்கு எனக் கூறப் பட்டிருக்கின்றனவே எனின்,

அவ்வா றன்றி அந் நூல்களால் அவை வேறு வகையாகக் கூறப் படுமாறு இல்லை; கூற இயலாது என்பது.

உலகம் என்னும் வியாபகத்தில் சிக்குண்டு கிடக்கும் சீவர்கள் தங்கள் தங்கள் பக்குவ நிறைக்கு ஏற்பப் பொருள்கண்டு உய்யும்படி எமது மூதாதைகளாம் இருடிகள், முனிவர்கள், சித்தர்கள் என்பவர்களால் கருணை மேலீட்டினால் வழங்கப் பட்ட உண்மை ஒன்றே எனினும்,

அவ் உண்மையை அடைவான் விழைந்து அதற் கேற்ப ஒழுகி நடுவு நிலைமை என்னும்—நிறை கோல் என்னும் — "தூக்கம்" என்னும் மத்திய கதமான தடத்தை அடைந்தவன் எவனோ,

அவன் பிரமசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், துறவறம் என்னும் நான்கு நிலையையும், அடைந்தவன் — உடையவன் என்பது பொருளாம் எனக் காண்க.

பக்குவ மாணவன் "தானே செய்வினை வேண்டியவால்—தனது இடையறு உழப்பினால் தன் னகத்து மறை பொருளாய் — மறையாய் இருக்கும் வேத வடிவாகிய—நாத சொரூபமாகிய ஆசானை வினை வேற்ற வேண்டும் எனவும், அவ் ஆசான் என்னும் அருட் குரு வடிவாகிய அமல நாதங்களே கைத்த இல்லாகிய அசுத்த தநுவில் உள்ள கைப்பு என்னும் களிம்பை நீக்கி அஃதாவது கைத்த இல்லாகிய அசுத்த தநுவைத் தக்க இல்லாகிய அமல தநுவாக மாற்றி—உடலுயிரை மாற்றி,

அத் தக்க இல்லைக் கொடையாக அளித்தலாகிய பேற்றினால் சாதலைத் தடுத்து — அம் மாணவன் காலனுக்குத் தன்னை ஈயாதவாறு தடுத்து ஆட்கொள்ளும் எனவும் "ஈயாமை" என்னும் மேலைச் சூக்தத்தால் கூறிப் போந்த எமது புலவர் பெருமான்,

"கோடுமை"

என்னும் இச் சூக்தத்தால்,

துறவறம் என்னும் ஆழியில் இழிந்த அம் மெய்ப்படியான் தன்னிலை முன்னிலைகளை அறியும் ஆற்றல் வாய்ந்தவன் ஆதலால்,

காரயான — இனமான முன்னிலை அழுக்குக்களைக் கண்டு கொண்டு உண்டு தன்னிலை அழுக்கைத் துரந்து — நீக்கி,

தனக்குக் கேடு விளைக்கக் கூடிய முன்னிலை களை ஐம்புல நுகர்ச்சிகளை மாற்றி—அடிமையாக்கி மதி சொரூபம் எனும் மந்திரி சொரூபமாக்கி சூனிய சிம்மாசனத் தமர்ந்து மூவுலகும் கோலோச்சும் திறனைக் கூறுகின்றார் என அறிதற் பாற்று.

## மூவடி முப்பது.

அறக்கூறு 14.

கோடுமை-சூக்தம் 3.

மறியெறி கோவெரி தன்பற ழோம்பலு
மரசுகளை கட்டி யாளவு மமைச்சை
யோர்ந்து கோ ணீரவு முன்னிலென்
[கொடுமையே.

என்பது சூக்தம்.

அமல முதற் படி கண்ட மெய்யடியான் வேண்டிய முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சிகரணித்து ஐம்புல வேடர்களை அடக்கி மாசு நீக்கி மதி சொரூபமாக்கிக் கோலோச்சுதலை உணர்த்துதல் நுதலிற்று இச் சூக்தம் என்க.

புலியானது மான் மறியைக் (ஆடு எனினும் ஆம்) கொன்று அதன் ஊனால் தன் குட்டியை வளர்த்தலும்,

அரசனவன் தன் கீழ் வாழ்வாருட் கொடியராயினாரைக் கொலையான் ஒறுத்துக் குடியோம்புதலும்,

தனக்கு அமைச்சராதற்கு உரியாரை உயிரச்ச உபதைகளுட்படுத்தி அவர் நீர்மையை அறிந்து கோடலும்,

கொடுமையான செயலாகா என எம் போலிய உலகியலுக்கு ஒப்பிய படிப்பாளிகள் பொருள் காணும் படியும்,

உண்மையை நாடும் ஆற்றலுடையார் குரு வருளால் அதனை அறிந்து உய்தியடையும் படியும் அமைக்கப் பட்டது இச் சூக்தம் என அறிதற் பாற்று.

குறள்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் [பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(ஷை 55 – ம் அதி. செங்கோன்மை செ. 10)

என்பது தேவர் திருவாக்கு. இஃது உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பியதே ஆம்.

அரசனாயினான் தன் கீழ் வாழும் பிரசைகளுள்ளே கொடியாரைக் கொலையான் ஒறுத்து நல்லாரைக் காத்தல்,

கழனிகளில் நெற் பயிர்களை ஒறுக்கும் களைகளைப் பிடுங்கி எறிந்து அந் நெற் பயிர்களைக் காத்தல் போலாகும் என்பது

இதன் உலகியலுக்கு ஒப்பிய பொருளாகும். உண்மை நிலைக்கு ஒப்பியது முன்னர்க் கூறுதும்.

அரசன் அமைச்சராதற்குரியாரை அறிந்து கோடற் பெற்றி,

குறள்.

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

(ஷை 51ம் அதி. தெரிந்துதெளிதல் செ.1)

என்னும்தேவர் திருவாக்குக்கு ஆசிரியர் பரிமேலழகர், சாணக்கியர் என்னும் சம்ஸ்கிருத பண்டிதர் இயற்றிய அர்த்த சாஸ்திரத்திற் கூறியவாற்றான் உலகியலுக்கு ஒப்பியவாறு உரைத்துப் போந்த அகல உரையான் அறியப் படும்.

அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ் அரசன் அறவோ னன்மையின் இவனைப் போக்கி அறனு முரிமையுமுடையா னொருவனை வைத்தற் கெண்ணினம். இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்தென்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

பொருளுபதையாவது சேனைத் தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு அவரான் இவ் அரசன் இவறன் மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையுமுடையான் ஒருவனை வைத்தற் கெண்ணினம். இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்தென்னை எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

இன்ப உபதையாவது தொன்று தொட்டு உரிமை யொடு பயின்றாளொரு தவமுதுமகளை விட்டு, அவளால் உரிமையுற இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டும் என்று என்னை விடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமே யன்றிப் பெரும் பொருளும் கைகூடும் எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்.

அச்ச உபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவன் இல்லின் கணழைப்பித்து, இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினர் என்று தான் காவல் செய்து, ஒருவனால் இவ் வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கினிய அரசனொரு வனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந்தது. நின் கருத்தென்னையோ எனச் சூளுறவோடு சொல்லுவித்தல்'

இந்நான்கினும் திரிபில னுபவழி எதிர்காலத்தும் திரிபில னெனக் கருத்தளவையாற் றெளியப்படும் என்பதாம்.''

என்பது அவ் அகல உரை.

மேல் இச்சூக்தத்தின் உண்மைப் பொருள் ஒரு சிறிது கூறப்படும்.

1

“மறியேறிகோவேரிதன்பறழ்ஓம்பலும்,

2

அரசு களைகட்டி ஆளவும்

3

அமைச்சை ஓர்ந்து கோள் நீரவும்
உன்னில் கோடுமை என்?

அ

புலியானது ஆட்டைக் கொன்று (நவ்விமறி எனினும் ஆம்) அதன் ஊனை அருத்தித் தன் குட்டியை ஓம்புவது போல,

துறவறம் என்னும் ஆழியில் இழிந்த மெய்யடியான் முன்னிலையாகிய சராசரப் பொருள்களின் தூலத்துள்ள காரமுள்ள அழுக்குக்களைக் கண்டு உண்டு,

தன்னிலையாகிய உடலுயிரின் அழுக்கை அகற்றி அமல விளைவேற்றித் தற்கொலை யின்றி உய்தி பெறுதலும்,

ஆ

அரசனவன் கொடியாரை ஒறுத்துக் குடியோம்பல் போலத் தனக்குக் கேடு விளைக்கக் கூடிய ஐம்புல நுகர்ச்சிகளை வாய்மையான விரதாதிகளால் அடக்கி ஒறுத்து யாக்கையை வசப்படுத்தலும்,

இ

அரசன் அமைச்சரைச் சோதனைகளால் உரியராதல் கண்டு அணுக்கராக்கிக் கோலோச்சுவது போல,

பகுப் புணர் வில்லாத ஐம்பொறிகளை உரிய சாதகங்களால் மாற்றி மதி சொரூப மெனும் மந்திரி சொரூப மாக்கிக் கோலோச்சுவதும்

ஆராயு மிடத்துக் கொடுமை ஆகா என்பது.

கொடுமை என்றால் என்னை?

கொடுமை என்பது உலகத்தவரால் கண்டு பிடிக்கப்பட்ட ஜீவகாருண்ணியம் என்னும் சொல்லுக்கு மறுதலையான செயல் என — ஜீவகாருண்ணியம் அற்ற செயல் எனப் பொருள் படும்.

ஒரு பௌதிகம் மற்றொரு பௌதிகத்தை உண்டு தான் தன்னிலையாகிய தூலத்துள்ள அழுக்கு நீங்க வேண்டும்.

அஃதாவது முன்னிலையாகிய தூலத்துள்ள காரமுள்ள அழுக்கினாற்றான் —அதனைக் கண்டு உண்டு தான் தன்னிலைத் தூலத்துள்ள அழுக்கை நீக்க வேண்டும் என்பது.

காரம் குறைந்த அழுக்கைக் காரம் கூடிய அழுக்கால் மாற்றும் உபாயம் இதுவே.

உடலைத் துரக்கும் உபாயம் — மாயையைத் துரக்கும் — துறக்கும் உபாயம் இதுவே ஆம். சாதலைத் தவிர்க்கும் உபாயம் இதுவே ஆம். இதற்கே,

“மறிஎறிகோவேரிதன்பறழ்ஓம்பலும்''

எனப் புலியின் செய்கை உவமையாகக் கூறப்பட்டது.

தனது உடலுயிரைக் கொல்லாது, அஃதாவது நிறை முறை இல்லாத அருந்தல் பொருந்தல்களால் — சிவ சம்பந்தம் அடையச் செய்யாது சவ சம்பந்தம் அடைவித்தற்குரிய அசைவ உணவுகளால் உடலுயிராகிய யாக்கை வம்பு பழுத்து மாண்டு போதலாகிய தற்கொலையைத் தவிர்த்து அதனை நித்தியத்துவம் பெறச் செய்வதே சீவ காருண்ணியமாகும்.

தம் முயிர்க்கு இரங்கிச் சாதல் என்னும் தற் கொலையைத் தவிர்க்க அறியாதார் பிற வுயிர்க்கு இரங்கும் சீவகாருண்ணியம் உடையார் என்பது வெறும் வார்த்தையே ஆகும்.

அறியாமை வடிவமுடைய சீவர்கள் —குறைபாடுடைய சீவர்கள் சுய நலங் கருதிச் செயல் புரிவதே யன்றிப் பிறரிடத்துக் கருணை வழங்குதற்கு உரியர்களா?

சீவர் தமது சுய நலத்தையே வஞ்சகமாக மறைத்துக் கொண்டு பிறர்க்கு நன்மை புரிபவர் போல முன் வந்து சமயோசிதமாகப் பேசி சில பல வஞ்சகச் செயல்களையே புரிந்து ஈற்றில் தமது நோக்கம் வெளி வரப் பெற்றுச் சுய நலம் கைகூடாமையால் துன்பமடைந்து பிறர்க்குத் தீமை விளைத்துப் பழிப்படல் கண் கூடு ஆதலால் அவர் தம் போலிக் கருணையின் பெற்றி நன்று புலப்படும்.

சீவர் சிந்தனை சொற் செயலெல்லாம் சுய நலம் கருதியனவே ஆதலால் —அபிமானம் பற்றியனவே ஆதலால் அவர் பிறர் மாட்டுக் கருணை வழங்குதற்கு உரியராகார் என்பது வெள்ளிடை ஆம்.

தாம் நினைத்தவை அனைத்தும் முன் வந்து நிற்கப் பெற்று — கைகூடப் பெற்று அவற்றை வேண்டியவாறு நிறை கண்டு அநுபவித்து உபாதி பெற்ற வாய்மையான துறவிகளாகிய தத்துவப் பெரியாரே — சீவத்துவம் நீங்கப் பெற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அரிய பெரிய ஆற்றல் அமையப் பெற்ற அந்தணரே சீவர் மாட்டுக் கருணை வழங்குதற்கு உரியர் என்பது கூறாமலே அமையும்.

சீவ வர்க்கங்களுள்ளே சரவர்க்கங்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்பது கொடுமை என்னும் சீவகாருண்ணியம் அற்ற செயல் எனவும்,

அசர வர்க்கங்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்பது கொடுமை அற்ற செயலே — சீவகாருண்ணியச் செயலே எனவும்,

• அசரவர்க்கமாகிய தாவர உணவே தம்மைச்சிவச் சம்பந்தமாக்குதற்குரிய சைவ உணவு எனவும்,

தாவர உணவை மட்டும் உட்கொள்பவரே சீவகாருண்ணிய முடையோர்— சைவர் எனவும் பெரு முழக்கிடுவோர் பலர்.

தாவரங்கள் ஓர் அறிவு மட்டுமே உடையன எனவும் அவற்றைக் கொன்று உண்பதால் வரும் கொடுமை —பாவம் மிகச் சிறியது எனவும், அச் சிறிய பாவமும் சில வகையால் நீங்கிவிடும் எனவும்,

இதுவே முத்தி நெறி எனவும் பலரும் ஓலமிடுவதும் பெரு வழக்காயிற்று. சமய நூல்கள் என வழங்குவன சிலவும் இவ்வாறே கூறுகின்றன.

சரமும் அசரமுமாகிய சீவ வர்க்கங்கள் தோற்றம் — பிறப்பு வளர்ச்சி உணர்ச்சி தொழில் என்பனவற்றில் சமானங்களே என்பது தற்காலப் பௌதிக ஆராய்ச்சி வல்லுநராலும் பலரும் கண்கூடாகக் காணுமாறு நன்று நிறுவப்பட்டது.

இவ் வுண்மை புண்ணிய புருடராகிய ஜகதீஸ் சந்த்ர வஸு (Sir. J. C. Bose)என்பவர் உஞற்றிய ஆராய்ச்சித் திறனமைந்த நூல்களை— நிகழ்த்திய விரிவுரைகளைக் காய்தல் உவத்தல் அகற்றிப் படிப்போர்க்கு எளிதிற் புலப்படாததாகாது. (வித்தகம் தொகுதி 1 இல 22 இல் "சீவ காருண்ணியம்" என்னும் கட்டுரையை நோக்குக.)

பின் வரும் பிரபல சுருதி தாவர சரீரங்களும் சங்கம சரீரங்களும் சமத்துவ முடையனவே என்பதனை நன்று வெளிப்படுத்துதல் காண்க.

## பிருகதாரண்ய உபநிடதம்.

'ஆகாசம். வாயு. அக்கினி. ஜலம், பிருதிவி என்பன பஞ்ச பூதங்கள்;

நேத்திரம். துவக்கு இரசனம். கிராணம், சுரோத்திரம் என்பன பஞ்ச இந்திரியங்கள்.

பிராணன். அபானன், சமானன், வியானன், உதானன் என்பன பஞ்சப் பிராணன்கள்;

மனம்; (என்னும்) இப்பதினறு கலைகளின் கூட்டத்தை வேத முணர்ந்த பெரியார் சூக்கும சரீரம் என்பர்"

"வாக்கு. பாதம். பாணி, பாயு, உபத்தம் என்பன பஞ்ச கன்மேந்திரியங்கள்;

சுரோத்திரம், தொக்கு, சக்ஷு. ரசனம், கிராணம் என்பன பஞ்ச ஞானேந்திரியங்கள்;

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன அந்தக்கரண சதுஷ்டயம்."

"இவ் வெல்லா வாக்காதிகளும் சூக்கும சரீரத்தின் அவயவங்களாம்.

இவ் வாக்காதி அவயவங்களும் பிரஹ்ம லோகத்தின் கண் இரா நின்ற ஜங்கம ஜீவர்கட்கும் மனுஷ்ய லோகத்தின் கண் இராநின்ற ஜங்கம ஜீவர்கட்கும் சமானங்களே ஆம்.

சில இடங்களில் வெளிப்படுதலின்

குறைவு மிகுதிகளைக் குறித்து அவற்றின் விஷமத் தன்மையும் தோற்றும்.

வாக்கு முதலாகப் பிராணன் ஈறய்ச் சூக்ஷும சரீரத்தின் எத்துணை அவயவங்களுளவோ, அவை மனுஷ்யாதி ஜங்கம சரீரங்களில் இருப்பனவே போல தரு முதலிய தாவர சரீரங்களிடத்தும் உள.

ஆனல், மனுஷ்யாதி ஜங்கமங்களிடத்தே அவ் வாக்காதி இந்திரியங்களின் வெளிப்படுதல் உண்டாதலே போல, தரு முதலிய தாவர சரீரங்களின்கண் அவற்றின் வெளிப்படையான வெளிப்படுதல் உண்டாதல் இல்லை.

ஆதலால் தரு முதலிய தாவர சரீரங்களும் மனுஷ் யாதி ஜங்கம சரீரங் களுக்குச் சமானங்களாம்."

சீவ வர்க்கம் யாவும் சமானமே ஆதலால் அசரவர்க்கமாகிய தாவரங்களை மட்டும் கொன்று அவற்றின் ஊனை உண்பது கொடுமை அல்ல எனவும்,

சர வர்க்கங்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்பதே கொடுமை—ஜீவ காருண்ணிய மற்ற செயல் எனவும் துணிந்து கையாளப்படும் கொள்கை ஆதாரமற்றதென்பது இதனல் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

யாவரும் முன்னிலையாகிய உணவுப் பொருள்களையே உண்டு உயிர் வாழ்தல் வேண்டுமே யன்றி வேறு வழியில்லை.

சீவர்களாகிய நாம் துன்பம் நீங்கி இன்புற்று வாழ்தலே — பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி உய்தியடைதலே முன்னிலை ஆகாரங்களை உண்ணுதலின் பயனுகும்.

ஆதலால் ஒவ்வொருவரும் தம் தம் சரீர இயல்புக்கு ஏற்ப —பௌதிக நிறைக்கு ஏற்ப—பௌதிக பஞ்சீகரணிப்புக்கு ஏற்ப, அஃதாவது தம் தம் சரீரத்தில் எந்த எந்தப் பௌதிக நிறை எந்த எந்த வகையான ஏற்ற இறக்க நிறையாகப்பொலிந்திருக்கின்றதோ அந்த அந்த நிறையைக் குறைக்கவும் கூட்டவும் ஏற்றவாறு நிறையும் இனமும் அமைந்த — காரமான முன்னிலை வர்க்கங்களைக் கண்டு எடுத்துப் பஞ்சீகரணித்து அளவோடு உண்டு பூதியத் தூய்மை அடைந்து உய்தி அடைதலே வேண்டற் பாற்று. தத்துவப் பெரியார் துணிபும் வேத உண்மையும் இதுவே ஆம்.

முன்னிலை யெல்லாம் அன்னமே— உண்ணப்படுவனவே — நிறை முறையோடு அநுபவிக்கப்படுவனவே.

மெய்யடியாரெல்லாம் முன்னிலையை நிறை கண்டு பஞ்சீகரணித்தே தமது உடலுயிரை அமலமாக்கி வீடடைந்தோராவர். இவ்வாறன்றி வேறு தடம் புகுந்து உடலுயிரை வாட்டி வருத்திச் செத்துப் போன பின் ஒருவன் முத்தியடைவ தென்பது முயற்கொம்பே ஆம்.

வேதாகம புராண இதிகாசங்கள் என வழங்கும் நூல்களும் சரவர்க்க உணவை — ஊன் உணவை வற்புறுத்தவும் இல்லை; கண்டிக்கவும் இல்லை. முன்னிலைப் பொருள்களை நிறை கண்டு பஞ்சீகரணித்தலையே வற்புறுத்துவனவாயின.

அவசிய நேர்ந்துழி எல்லாம் மிருக முதலியவற்றின் கொலை இந் நூல்களில் விதிக்கப்பட்டே உள்ளது.

முன்னிலையாகிய பிரகிருதி காரியம் யாவும் அன்னமே என்பதனைப் பின் வரும் உபநிடதச் சுருதி நன்று புலப்படுத்துதல் காண்க.

## மைத்திராயண்ணியுபநிஷத்

"புருஷன் சேதனன். அவன் மாயைக்குள் இருக்கின்றான். அவன் போக்தா. (புஜிக்கிறவன்)

அவன் பிரகிருதி காரியமான அன்னத்தைப் புஜிக்கிறான். இந்தப் பூதாத்மாவும் இவனுக்கு ஆத்மாவுக்கு) அன்னமாகின்றான்.

அந்த அன்னத்தை உண்டாக்கினது பிரகிருதி யாகையால் அன்னம் மூன்று குணமுடையதாய் இருக்கிறது.

இதை அநுபவிக்கிறவன் தான் உள்ளே இருக்கிற புருஷன். அதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம் இருக்கிறது.

பசு முதலான பிராணிகள் காரணத்திலிருந்து உண்டாகின்றன. அவையும் புஜிக்கத்தக்கன ஆகின்றன. ஆதலினலே காரணமாயிருக்கிற பிரகிருதியும் புஜிக்கத் தக்கது தான்.

ஆதலினலே புருஷன் அனுபவிக்கிறவன் பிரகிருதி அநுபவிக்கப் படுகிறது;

அந்தப் பிரகிருதிக்குள் இருந்து கொண்டே புருஷன் அநுபவிக்கிறான். பிரகிருதியினல் செய்யப் பட்ட அந்த அந்தமானது முக்குணங்களையுடைய விகாரமாகையால் மகத் தத்துவத்தை ஆதியாகவும் விசேஷங்களை(பஞ்ச பூதங்களை) முடிபாகவும் உடையது.

ஒரு சேதனம் உண்டு என்பதற்கு இதுவே அடையாள மாகின்றது.

........................................................"

சீவகாருண்ணிய மூர்த்திகளுள் தலை சிறந்தவர் என உலகோர் பலரால் போற்றப்படும் கௌதம புத்தர் என்பவர் தமது சிஷ்யர்களுள் ஒருவராகிய தேவதத்தருடன் சம்பாஷித்துக் கொண்டு இருந்த போது உணவுக்காக உயிர்ப் பிராணிகளைக் (மிருகம் பறவை முதலியன) கொல்லலாம் என்று கூறினர் என்ப.

நீலகேசித் தெருட்டு என்னும் பௌத்த காவியமும்,

"ஊன் தின்னல் இழுக்கென்னன்"

என புத்தர் ஊனுணவை அநுசரித்தமையை வலியுறுத்து கின்றது.

பௌத்த சமயிகளும் கொலையை மறுத்துப் பேசுபவராயினும், அதன் காரியமும் காரணமுமாய் அமைந்த ஊன் மிசைதலை ஒழித்த வரல்லர் என்பது வெள்ளிடை. இலங்கையிலும் பிற இடங்களிலும் உள்ள பௌத்த சமயிகள் இதற்கு உறு சான்றாவர்.

இதனால் புத்தர் ஜீவகாருண்ணியம் அற்றவரா? அற்றவர் என்று உலகோர் கூற ஒருப்படுவாரா?

ஊனில் உள்ள அழுக்கை அகற்றுதற்கே—அழுக்கை அகற்றி ஒளியைப் பெருக்குதற்கே இனமான—காரமான உணவை — முன்னிலையாகிய தூலத்துள்ள ஊனை உண்ணுதல் வேண்டும் என்ப

ஊனைப் பெருக்குதற்கு—ஊனாகிய அழுக்கைப் பெருக்குதற்கு ஊனை உண்ணுதல் கூடாது; உணவை — அருந்தலைக் கொள்ளுதல் கூடாது.

அசுத்த நிறையாகிய ஊனைச் சுருக்கி ஒளியைப் பெருகச் செய்தல் வேண்டும்.

இதனாற்றான் அருவாய் உள்ளாய் விளங்கும் பொருளாகிய அருள் ஆக்கமுறும் — அருளுடைமை உளதாகும்—சீவகாருண்ணியம் அமையப் பெறும்.

ஊன் என்னும் அழுக்குப் பெருக்கமடைதலால் —அசுத்த நிறை ஆதிக்கம் பெறுதலால் அருளுடைமை கைகூடாது.

இவ் வுண்மையை வற்புறுத்துதற் பொருட்டே பின் வரும் வேதர் திருவாக்கு எழுந்ததென அறிதற்பாற்று.

குறள்.

———

தன்னூன் பெருக்கற்குத்தான்பிறி தூனுண் [பான்
எங்ஙன மாளு மருள்.

(ஷை 26-ம் அதி. புலால் மறுத்தல் செ. 1)

"ஊனைத்தின்றூனைப்பெருக்காமைமுன்னி [னிதே"

என்னும் ஆன்றோர் வாக்கும் இவ் உண்மையை வலியுறுத்துகின்றது.

நஞ்சை நிறை முறை இன்றி உண்டால் சாதல் கிட்டும்; நிறை முறையோடு உண்டால் செந் நீர் தூய்மை அடைந்து அமரம் கிட்டும்; சாதல் நீங்கும்.

ஊனால் ஊன் பெருகிச் சாதல் கிட்டுதலும், ஊனால் ஊன் சுருங்கிச் சாதல் நீங்குதலும் மெய்யேயாகும்.

முன்னிலை ஆகாரங்களில் பௌதிக நிறைக்குப் பொருத்தமான வற்றை உண்டே ஊனைச் சுருக்கி ஒளியைப் பெருக்கல் வேண்டும். நிறை முறை இல்லா உணவே — ஊனுணவே நூல்களால் கண்டிக்கப்பட்டன ஆகும்.

பௌதிக நிறைக்குப் பொருத்தமான உணவே சைவ உணவு. அல்லாதன எல்லாம் அசைவ உணவே.

"புலான் மறுத்தல்" என்பது இரட்டுற மொழிதலாய், நிறை முறை யில்லாப் புலால் உணவை நீக்குதல் எனவும், நிறைமுறையான புலால் உணவால் தன்னிலையாகிய புலால் உடலை மாற்றுதல் எனவும் பொருள் படுவதாகும்.

குறள்.

———

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

(ஷை. 20-ம் அதி. புலான்மறுத்தல் செ. 10)

எனத் தேவர் கூறியதும் அறிக.

தன் புலாலுடலாகிய அசுத்த நிறை அமைந்த மருளுடம்பைச் சாதலடையச் செய்யாது — பிணவியல் அடையச் செய்யாது நிறை முறையான அருந்தல் பொருந்தல்களால் அதனை மறுத்தவனை —மாற்றினவனை —மாற்றிப் பிறந்த மெய்யடியானாகிய சீவகாருண்ணிய மூர்த்தியை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் என்பது இதன் பொருளாகும்.

மறுத்தல்— மாற்றுதல் — அமலமாக்குதல். சீவன் முத்தனை மூவுலகும் தொழும் என்பது சுருதி யுக்தி அநுபவங்கட்கு ஒத்த உண்மையே ஆகும்.

"ஊனுக்கு ஊன்"

"இனத்தை இனம் சேரும்"

"இனத்தை இனங்காக்கும்"

"இனத்தை இனம் கொல்லும்"

என்னும் பழமொழிகளும் ஈண்டு நோக்கற்பாலன.

ஊன் சுருங்க ஊன் தின்னல் நன்று என்பதும் ஊன் பெருக ஊன் தின்னல் தீது என்பதும் வேத உண்மையே ஆதல் பின் வரும் பிறபல சுருதியாலும் நன்று வலியுறுத்தப்பட்டது.

ஞானசம்பந்தர் தேவாரம்.

———

"ஊனோடுண்டல் நன்றென ஊனோடுண்டல் [தீதென
ஆனதொண்டரன்பினாற்பேசநின்றதன்மை [யான்

..........................................."

(ஷை திருவானைக்கா — திருவிராகம்—பண் (கௌசிகம் செ.9.)

இவ்வாறு தன்னிலையாகிய தூலத்துள்ள அழுக்கை, முன்னிலையாகிய சராசர சீவ வர்க்கங்களின் தூலத்துள்ள அழுக்கை நிறையோடு உண்ணுதலால், அகற்றி புலால் துருத்தியைப் பூந்துருத்தியாக மாற்ற வேண்டும் என்னும் வேத உண்மையையே

“பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில்
பொல்லாத புலால்துருத்தி போக்கலாமே,”

என்னும் அருமறையால் அருளிப் போந்தனர் எமது அப்பர் பெருமான் என அறிக. மேலும் விரிப்பிற் பெருகும்.

இவ் உண்மைகளை அறியாது முன்னிலையாகிய சீவ வர்க்கங்களுள் சரவர்க்கங்களின் தூலத்துள்ள அழுக்காகிய ஊனை உண்ணுதலை மாத்திரம் கொடுமை என — சீவகாருண்ணியம் அற்ற செயல் எனத் துணிந்து நிறை முறையான அருந்தல் இன்றி மாண்டு போகும் உலக மாக்களுக்கு உண்மையை உணர்த்துதற் பொருட்டே — வாய்மையான ஜீவகாருண்ணியம் இன்னது என அறிவுறுத்தற் பொருட்டே புலியின் செயலை உபமானமாகக் காட்டி

“மறியேறி கோடுவேரி தன் பறழ் ஓம்பலும்,,

எனக் கூறியருளினர் எமது இடைக்காடர் பெருமான் என அறிக.

அருந்தல் பொருந்தல் என்னும் பயில்வுகள் தூலமும் சூக்குமமும் என இரு வகைப்படும்.

இன்பக் கூறு என்னும் அத்தியாயத்தில் “ஊன்மிசைதல்” என்னும் சூக்தத்தால் கிழத்தியும் கிழவனுமாகிய ஊனுயிர்கள் ஒன்றனை ஒன்று மிசைதலாகிய சூக்கும தர்மம் கூறப்பட்டது. அஃதாவது சூக்குமப் பயில்வின் பண்பும் பயனும் கூறப்பட்டன என்பது.

“கொடுமை” என்னும் இச் சூக்தம் ஷெ “ஊன்மிசைதல்” என்னும் சூக்தத்தின் பொழிப்புரை போல அமைந்து அருந்தல் என்பதன் தூல தர்மத்தை — தூலப் பயில்வை விளக்கியது என்று கூற ஆம்.

“அரசு களைகட்டி ஆளவும்”

அரசன் தன் கீழ் வாழும் குடிகளுள்ளே கொடியாரைத் தண்டித்து அக் குடிகளை ஓப்புதல்போல, மெய்யடியான் தனக்குக் கேடு விளைக்கக் கூடியமுன்னிலை வினை ரூபங்களுக்கு அஞ்சாது தண்டிப்பதே.

அஃதாவது முன்னிலையாகிய தூலம் தன் வசமாதற்கு ஏற்ற தண்டனைகளைப் புரிவதே — இச்சையால் தனக்குக் கேடு விளைக்கும் ஐம்புல நுகர்ச்சிகளை வாய்மையான விரத முதலியவற்றால் அடக்கித் தண்டித்தலே தண்டித்து அவற்றில் உள்ள அசுத்தத்தை நீக்கி அவற்றை மாற்றுதலே— வசப் படுத்துதலே அரசுகளைகட்டி ஆளுதலாகிய உபமானத்தால் உய்த்துணர வைக்கப்பட்ட பொருளாகும்.

“அமைச்சை ஓர்ந்து கோள் நீரவும்”

மேலே கூறியவாறு ஐம்புல நுகர்ச்சிகளை அடக்கித் தண்டித்தலால், கீழ் நிறையுடைய ஐம்புல வேடர்களை — பகுப் புணர்வில்லாத ஐம்புல உணர்ச்சிகளை மாற்றி — பற் பல உபாயங்களால் — சாதன நிறை பேதங்களால் அழித்து மதி எனும் உணர்ச்சி வடிவமாக்கித் தனக்கு மதி மந்திரி என அமைத்துக் கொண்டு கோலோச்சுவதே,

முன்னிலையை— முன்னிலையின்பெட்பைப் பகுத்துணர்ந்து நிச்சயிக்கும் உணர்ச்சியைப் பெறுமாறு முயன்று அத்தகைய தூய உணர்ச்சியை அடைந்து ஐம்புல வேடர்களையே மதி சொரூபம் எனும் மந்திரி சொரூபமாக்கி சூன்ய சிம்மாசனத்து அமர்ந்து மதி எனும் மந்திரியால்—மதியால் விதிக்கப் பட்ட ஆணைத்தையும் இயற்கையாய் அமைக்கப்பட்ட உலகத்தை நியதி களைந்து நன்மையை வழங்கித் தின்மையைக் களைதலே

“அமைச்சை ஓர்ந்து கோள்நீர”

என்பதனால் பெறப்பட வைத்த உண்மையாகும்.

இவற்றை உணர்வார்ப் பெறின், இவையாவும் வாய்மையான நன்மையையே பயப்பன ஆதலால்— வாய்மையான புருஷார்த்தங்களை — நித்தியத்துவத்தை அடைவிக்கும் செயல்களை இயற்கைமுறையான் அமைந்த செயல்களை சீவகாருண்ணியச் செயல்களை — சாதகங்களை என்பது வெள்ளிடை ஆம்.

அன்றி, உலக மாக்கள் தங்கள் அறியாமையால் கருதுவது போல கொடுமையான செயல் ஆகா — சீவகாருண்ணியம் அற்ற செயல் ஆகா என்பாராய்,

“உன்னில் என் கோடுமையே”

என இச் சூக்தத்துக்கு முற்றுத் தந்தனர் புலவர் என அறிதற் பாற்று.

இதுகாறும் கூறியவைகளால் மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் அறக் கூறு என்னும் மூன்றாம் அத்தியாயத்தில் நான்காம் சூக்தமகுடமாகிய “கோடுமை” என்பதன் பண்பும் பயனும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்

---


தமிழன்பர்களுக்கு

ஓர் நல்விருந்து!

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின்
நூல்களைப் படித்து
ஆனந்த மடையுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) ரூ. | | 12–8–0 |
| 2. | வசனங்கள். (6பாகங்கள்) | | 2–0–0 |
| 3. | கதைக்கொத்து | | 0–8–0 |
| 4. | பகவத் கீதைபகுதி | | 0–8–0 |
| 5. | கட்டுரைகள் | 1 தத்துவம் | 0–10–0 |
| | ,, ,, | 2 மாதர் | 0–8–0 |
| | ,, ,, | 3 கலைகள் | 0–8–0 |

6. Bharathi and his Works by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0—4—0

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

# திருவாசக உண்மை.

யாழ்ப்பாணம், தென்கோவை தமிழ்ப்பண்டிதர்

**ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை**

(வித்தகம் பேராசிரியர்)

அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவியருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 0—2—9 அணா தபால் முத்திரைப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்

புதுவை.



## TOWARDS TRANSCENDENCE.

Vedanta Kesari Madras, Writes:—

"The book speaks of undiscovered possibilities hidden in the deeper reaches of the mind which could be brought into the conscious plane by a process of Transcendance of the various lower planes by which man becomes the superman possessed of great psychic powers, and later emerges with a still higher order of consciousness, as a Divine Personality."

Price As. 12.

**Nandhi Publishing House**
PONDICHERRY.



இனம்! இனம்!

## சுத்த சாதகம்

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் அல்லது 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.

புதுவை.


னத்திற்கு சேர்த்துக் கொள்ளமாட்டார்கள் இது உலக வழக்கம்.

இவ்விடம் நூதனமாக விளம்பராதிகள் செய்து கொண்டு வரவிருக்கும் ஷ்ரீ காமகோடி மடாதிபதிகள் எந்த பரம்பரையில் சேர்ந்தவர் என்பதைத் தெரிந்துக்கொள்வதற்காக சிலபிரசினைகள் பத்திரிகைகளில் வியாஸமாகவும் அறிக்கை விளம்பரமாகவும் அச்சிட்டு ஷ்ரீ மடாபிமானிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் கொடுத்து கேழ்க்கப்பட்டன.

ஷ்ரீ பிரசினைகள் ஹிந்திபாஷையிலிருப்பதை தமிழில் மொழி பெயர்த்து அடுத்த வியாஸத்தில் எழுதுகின்றேன்.

(தொடரும்.)


# ஜல வைத்தியம்.

வேண்டுவோர் 6 அணா தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.

புதுவை.

## "வித்தகம்" முதல் வருட, இரண்டாவதுவருட சஞ்சிகைகள் புத்தகமாக கட்டப்பட்டன.

ஒவ்வொன்றும் விலை ரூபா 3-8-0

தபால் செலவு பிரத்தியேகம்.

## விஷய அட்டவணை.

### முதல் வருட தலையங்கங்கள் (Editorials)

1 எமது கொள்கை.
2 சைவ சமயம்
3 தத்துவப்பெரியார் நூல்களை
4 எழுதாமறை
5 குருநெறி
6 வேதாகமங்கள்
7 இருக்கு வேதம்
8 தமிழ் நெடுங் கணக்குத் திருத்தத் தீர்மானம்
9 திருவருளாட்டம்
10 நாதம்
11 அமல ஐகாரம்
12 அரமுதல் நாற் பொருள்
13 இல்லறம்
14 அன்னம்
15 துப்புரவு
16 17மனைவி
18 பொருள்
19 அருந்தல் பொருந்தல் அணந்தல்
20 உடம்பின் பயன்
21 இடம்பட வீடெடேல்
22 ஜீவகாருண்ணியம்
23 முயற்சி
24 விதேக முத்தி சதேக முத்தி
25 நான் மறை
26 பிரம சரியம்
27 இந்து மதம்
28 அடியார் பெருமை
29 நிறை
30 அடியார் இயல்
31 அருணோதயம்
32 யோகம்
33 அன்பு
34 பணி செய்து கிடத்தல்
35 அருள்
36 சகச நிட்டை
37 பாச பதம்
38 மாற்றிப் பிறத்தல்
39 கற்பனை
40 சமாதி
41 பண்டைக் காலப் பௌத்த சமணரும் தற்காலச் சைவரும்
42 அரஞ்செய விரும்பு
43 நிறை முறை இல்லாக் கற்பனை
44 சங்கச் சான்றோர் நூல்கள்
45 தூல சூக்கும சம்பந்தம்
46 பதி பசு பாச உண்மை
47 வீடு பெற நில்
48 சண்டேசுரப் பேறு
49 காயசித்தி
50 ஆரியரும் தமிழரும்
51 வித்தகம் பேசேல்

### தொடர்ச்சியான கட்டுரைகள்.

தலையாய அறம்.
உடம்பின் அருமை பெருமை
இருக்கு வேத உண்மை சிதையை வந்தித்தல்
ஆரியனும் தமிழும்.
ஈழநாடும் தமிழும்.
நத்தம்போல் கேடு" என்னும் குறளுரை.
உயிர் வருக்கம்
உடலுயிரிர் சம்பந்தம்.
பெண்பார் புலவர்கள்.

### இரண்டாவது வருட தலையங்கங்கள் (Editorials)

1 எமது பத்திரிகை
2 கல்வி
3 சிவமும் விஷ்ணுவும்
4 கேள்வி முயல்
5 காமேசன்
6 சோம்பித்திரியேல்
7 இடம்பொருள் ஏவல்
8 கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை
9 வேதாந்தம் சித்தாந்தம்
10 சுழினை
11 மலபரிபாகம்
12 இருவினை ஒப்பு
13 விட்ட குறை
14 இராப் பகலற்ற இடம்
15 அரவமாட்டேல்
16 ஆலயந் தொழுவது சாலவும் நன்று
17 விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
18 ஒத்த இடத்து நித்திரை கொள்
19, 20 ஓதுவதொழியேல்
21 ஆறுவது சினம்
22 மறைக்காட்டுக் கதவு திறத்தல்
23 உடையது விளம்பேல்
24 ஈவது விலக்கேல்
25 ஈயார் தேட்டைத் தீயார் கொளவர்
26 ஐயமிட்டுண்
27 குற்றம் பார்க்கில் சுற்றமில்லை
28 சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு
29 நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை
30 பொருடனைப்போற்றி வாழ்
31 சூது விரும்பேல்
32 அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
33 மார்யல்லது காரியமில்லை
34 பூமி திருத்தி யுண்
35 வைசயொத்திருந்தால் செய்வன செய்
36 ஒருவனைப்பற்றி ஓரகத்திரு
37 ஊக்கமது கைவிடேல்
38 இல்லறமல்லது நல்லறமன்று
39, 40 கேட்டிலுறுதி கூட்டுமுடைமை,
41 மெல்லினல்லாள்தோள் சேர
42 கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி
43 தெய்வமிகழேல்
44 மோனமென்பது ஞான வரம்பு
45 சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்
46 கீழ்மை யகற்றும்
47 தேடாதழிக்கிற்பாடா முடி
48 ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
49 நீரகம் பொருந்திய ஊரகத்திரு
50 நல்லிணக்கமல்லது அல்லர்படுத்தும்
51 மீதூண் விரும்பேல்
52 சனி நீராடு
53 காப்பது விரதம்
54 வானஞ் சுருங்கில் தானஞ் சுருங்கும்

### தொடர்ச்சியான கட்டுரைகள்.

ஸர் ஜகதீஸ்சந்திரவஸு அவர்கள் செய்த பிரசங்கம்
சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி
அயிக்கவாதம் பேசிப் பயிக்க வாதம் புரியும்அறிவிலிகளுக்கு வாய்ப் பூட்டு
பொ. முத்தையா பிள்ளை, உண்மை முத்தி நிலை ஆராய்சசி
உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி மறுப்பு.
ஈழநாடும் தமிழும்
உடலுயிர் சம்பந்தம்
பெண்பாற் புலவர்கள்
ஸ்ரீ கஞ்சி காம கோடி பீடத்திற்குரிய உத்கிருஷ்டம் நான்கின் ஆராய்ச்சி
20 ம் நூற்றுண்டின் இணையற்ற விஞ்ஞானம்.

Imprimerie "VITTAGAM" -- Pondichéry. Le Directeur-Gérant, R. Nagarattinam.